# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPEMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

## 2007

# தமிழ்மொழி

## வளர்நிலை 4

சுட்டெண் :

**நேரம் : 90 நிமிடங்கள்**

**மொத்தப்புள்ளிகள் : 100**

1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை _______________________________.

   (இருநூற்று நாற்பத்தேழு, முப்பது, பதினெட்டு)

2. முத்தமிழ் என்றால் _______________________________ என்பனவாகும்.

   (இன்தமிழ் செந்தமிழ் பைந்தமிழ், பண் பாட்டு நாடகம், இயல் இசை நாடகம்)

3. தமிழினி நன்றாக வீணை _______________________________.

   (மீட்டுவாள், வாசிப்பாள், படிப்பாள்)

4. தைப்பொங்கலுக்கு மறுநாள் கொண்டாடப்படும் உழவர் திருநாள் _______________________________.

   (ஆடிப்பிறப்பு, புத்தாண்டு, மாட்டுப்பொங்கல்)

5. ஆடிப்பிறப்பன்று நடக்கும் ஒரு சிறப்பான நிகழ்வு _______________________________ காய்ச்சுதல்.

   (பனங்கூழ், ஆடிக்கூழ், ஒடியற்கூழ்)

6. தோலினால் ஆன இசைக்கருவிகளை _______________________ என்பர்.

   (முழவுகள், யாழ்கள், தாளங்கள்)

7. அரசன் படை நடத்திச் செல்லும் போது முழங்குவது ____________________.

   (மேளம், மத்தளம், முரசு)

8. எமது பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று _______________________.

   (கிரிக்கட்டு, காற்பந்து, கிளித்தட்டு)

9. உலகின் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்று தமிழீழத்தில் உள்ளது. அது _______________________________த் துறைமுகம்.

   (கொழும்பு, காங்கேசன்துறை, திருகோணமலை)

10. எமது தாயகத்தில் இல்மனைட் தாதுப்பொருள் விளையும் இடம்

_______________________________.

(புங்குடுதீவு, புல்மோட்டை, புளியந்தீவு)

11. நிலத்திலும் நீரிலும் வாழக்கூடிய உயிரிகள்

_______________________________ போன்றவை ஆகும்.

(நண்டு இறால், பாம்பு சுறா, முதலை ஆமை)

12. நண்டு இறால் மட்டி போன்றவற்றை

_______________________________ என்பர்.

(ஓட்டுயிரிகள், கூட்டுயிரிகள், வீட்டுயிரிகள்)

13. நாம் நல்ல நண்பர்களோடு _______________________________. வளர்க்க வேண்டும்.

(அன்பை, பகையை, வெறுப்பை)

14. கன்னியாய் வெந்நீர்க் கிணறுகளைத் தோண்டியவன்

_______________________________.

(எல்லாளன், இராவணேசன், பண்டாரவன்னியன்)

15. உடற்பயிற்சி உடலையும் _______________________________ உறுதி செய்கின்றது.

(தலையையும், முகத்தையும், உள்ளத்தையும்)

16. எலிவளை ஆனாலும் _______________________________ வேண்டும்.

(தனிவளை, சிறுவளை, பெருவளை)

17. அவை எல்லாம் நல்ல நூல்களே _______________________________ உனக்குத் தேவையானதை மட்டும் படி.

(இவற்றுள், அவற்றுள், உவற்றுள்)

18. தன் மானத்தைக் காப்பதற்குத் தமிழன்

_______________________________.

(உயிர்விடுவான், ஓடிஒளிவான், காட்டிக்கொடுப்பான்)

19. மாரிமழை பெய்யாததால் விளைநிலங்கள்

_______________________________ வெடித்துக் கிடந்தன.

(கண்டதுண்டமாக, சன்னல்வின்னலாக, பாளம்பாளமாக)

20. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் ______________________________.

(புறங்கை, உள்ளங்கை, முகம்)

21. ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் __________________.

(கொக்கு, கோழி, முதலை)

22. வவுனிக்குளத்தைக் கட்டுவித்த இலங்கைத் தமிழ்மன்னன்

______________________________.

(சங்கிலியன், துட்டகெமுனு, எல்லாளன்)

23. தமிழர்களது இல்வாழ்வில் காணப்படும் சிறந்த பண்புகளில் ஒன்று

______________________________.

(மிச்சம் பிடித்தல், விருந்தோம்பல், சமைத்துண்ணல்)

24. ஒருவரது உருவத்தை வைத்து அவரை எடைபோட __________________.

(வேண்டும், வேண்டாம், வேண்டியது)

25. தமிழர் மருத்துவ நோக்குடன் பயன்படுத்தும் ஒரு மரம் ________________.

(வேம்பு, பனை, மாமரம்)

26. க்ண்ச்ழ் இவ்வெழுத்துகள் __________________ எழுத்துகள் எனப்படும்.

(உயிர், உயிர்மெய், மெய்)

27. ______________________________ப் பழங்களை முக்கனிகள் என்பர்.

(மா பலா மாதுளை, மா பலா வாழை, மா பலா முந்திரி)

28. மா+பழம் இதைச் சேர்த்து எழுதினால்

______________________________ எனவரும்.

(மாம்பழம், மாபழம், மாப்பழம்)

29. மாந்தருக்குக் கற்கக் கற்க ஊறுவது ______________________.

(அன்பு, அறிவு, சினம்)

30. மிகத் தொன்மையான தமிழ் இலக்கணநூல்

______________________________.

(தொல்காப்பியம், திருக்குறள், தமிழ்வழி)

(புள்ளிகள் 30)

2) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| வீரதீர | கலகல | வண்ணவண்ண |
| கலீர்கலீர் | திரள்திரளாக | |

1. அந்தப் பூஞ்சோலை ______________________ மலர்களால் நிறைந்திருந்தது.

2. கனிமொழி ______________________ என்று சிரித்தாள்.

3. புத்தாண்டு விழாவிற்கு மக்கள் ______________________ச் செல்கின்றனர்.

4. மங்கை நடனமாடியபோது சலங்கை ஒலி ______________________ எனக் கேட்டது.

5. பாட்டி ______________________க் கதைகளைக் கூறியபடி சோற்றை ஊட்டுவார்.

(புள்ளிகள் 05)

3. கீழ்க்காணும் பகுதியை வாசித்து தரப்பட்டிருக்கும் சொற்களில் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| தெய்வம் | போற்றுவர் | விருந்தளித்து |
| அணைத்து | தமிழர்கள் | |

## தமிழர் பண்பாடு

மிகப் பழங்காலத்தில் இருந்தே ______________________ பண்பட்ட நாகரிகத்தை உடையவர்கள். சிறந்த பண்பாடுகளே ஓர் இனத்தின் உயர்வைக் காட்டுவன. பெற்றோரைத் ______________________ எனப் போற்றுதல், ஆசிரியரைப் பணிதல் ஆகியவை தமிழர் பண்பாடு. தமிழர்களது தலையாய பண்பாடு விருந்தோம்பலாகும். வீட்டிற்கு வந்தவரைப் புதியவர் என்றாலும் அன்புடன் வரவேற்பர். இன்சொல் கூறி ______________________ மகிழ்வர். ஒருவரை ஒருவர் நேரில் காணும்போது கைகூப்பி வணக்கம் கூறுவர். கூடிவாழ்ந்து உறவாடி இன்புறுவது, நல்வாழ்க்கை எனப் ______________________. நண்பர்களைக் காணும்போது நலம் கேட்பதும் பிறர் துன்பங்களில் தாமும் வருந்துவதும் தமிழர் மரபு. பேரன் பேர்த்தி, பாட்டன் பாட்டி போன்ற முதியோரை ______________________ வாழ்தல் தமிழரின் அன்பால் விளைந்த பண்பாகும்.

(புள்ளிகள் 10)

4. கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி வாக்கியங்களை நிறைவு செய்க.

1. அன்பும் உறவும் மேலோங்க விழாக்கள்
   ________________________________________.

2. நாம் தைப்பொங்கல் அன்று பொங்கல் பொங்கித் தமிழ்ப் புத்தாண்டைக்
   ________________________________________.

3. எல்லாளன் நாற்பத்துநான்கு ஆண்டுகள் இலங்கையை
   ________________________________________.

4. உலக வியப்பான சீனப் பெருஞ்சுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு
   ________________________________________.

5. தமிழர் திருநாட்களில் விளக்கு ஏற்றி நிறைகுடம்
   ________________________________________.

(புள்ளிகள் 10)

5. படத்தைப் பார்த்து, மிகச் சரயான சொல் / சொற்றொடருக்கு நேரே புள்ளடி ( **X** ) இடுக.



1. படத்தில் உள்ள காட்சி

| | |
|---|---|
| கொண்டாட்டம். | ☐ |
| இடப்பெயர்வு. | ☐ |
| திருமணம். | ☐ |

2. எல்லோரும்

| | |
|---|---|
| துள்ளுகின்றனர். | ☐ |
| நடக்கின்றனர். | ☐ |
| ஆடுகின்றனர். | ☐ |

3. பெண்ணின் இடுப்பில் இருப்பது

குழந்தை. ☐

பாவைப்பிள்ளை. ☐

நாய்க்குட்டி. ☐

4. சிறுவன் தள்ளிச் செல்வது

சிற்றுந்து. ☐

மிதியுந்து. ☐

தொடருந்து. ☐

5. ஒருவர் கைக்குள் சுருட்டி வைத்திருப்பது

சேலை. ☐

குடை. ☐

பாய். ☐

(புள்ளிகள் 05)

6. கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. தமிழில் தனித்து இயங்கமுடியாத எழுத்துக்கள் எவை?

________________________________________

2. தைப்பொங்கல் ஏன் கொண்டாடப்படுகின்றது?

________________________________________

________________________________________

3. மிருதங்கத்தின் பண்டைய பெயர் என்ன?

______________________________

4. திருகோணமலையில் இல்மனைட் கிடைக்கும் இடத்தின் பெயர் என்ன?

______________________________

5. கோலாட்டக் கலைக்குக் கோலாட்டம் என்ற பெயர் ஏன் ஏற்பட்டது?

______________________________

______________________________

(புள்ளிகள் 15)

7. கீழேயுள்ள அறிவிப்பை வாசித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக.

# அறிவித்தல்

## கோடைகாலச் சுற்றுலா

**நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பு!**

- உங்களுக்கான ஐரோப்பிய கோடைக்காலச் சுற்றுலா ஒன்று, தமிழ்ப் பள்ளியால் ஏற்பாடு செய்யயப்பட்டுள்ளது.
- பெல்சியம், பிரான்சு, சுவிற்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் ஊடாக 14 நாட்கள். கட்டணம் ஒருவருக்கு 100 யூறோக்கள் மட்டுமே. தங்கிடம், உணவு என்பன பள்ளியால் வழங்கப்படும்.
- இவ்வாய்ப்பை மாணவர்கள் ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு பள்ளி நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.
- உங்கள் பதிவிற்கு பள்ளியின் துணை அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்
தமிழ்ப்பள்ளி

1. இது எவ்வகுப்பு மாணவர்களுக்கான அறிவிப்பு?

___

___

2. இவ்வறிவிப்பில் எதைப்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது?

___

___

3. இச்சுற்றுலாவில் செல்லவிருக்கும் நாடுகள் எவை?

___

___

4. மாணவர்கள் பதிவிற்கு யாருடன் தொடர்பு கொள்ளவேண்டும்?

___

___


5. இச்சுற்றுலாவில் கலந்துகொள்ள விரும்புகிறீரா? ஏன்?

___

___

(புள்ளிகள் 10)

8) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையொன்று எழுதுக.



(புள்ளிகள் 15)